**கலைஞர் எனும்**
**மாமனிதர் கருணாநிதி.**



# நீ சரித்திர நாயகன்;
சாதனையாளன்,
அரசியல் களம் ஆயிரம் சொல்லும்!

# என் மனதில்,
மனிதனாய் வாழ்ந்த,
மாமனிதன் நீ!
நீ எழும் போது,
காயப் படுத்தியவர்களையெல்லாம்,
கரம் கோத்து அணைத்திருக்கிறாய்!

# இடர் களைந்து,
துயர் நீங்கி;
ஒவ்வொரு படியாய்,
நீ உயர்ந்தது;
மனத்திண்மையின்,
மகத்தான நிறைவு!

# தூற்றியவர்களையும்,
போற்றியுள்ளாய்!
நட்போடு நலம் காத்திருக்கிறாய்!

# அரசியல் ஆடுகளத்தில்,
விருப்பமில்லாமல்,
சில விழுமங்களை,
நீ நிகழ்த்தியிருக்கலாம்;
அவை ஒரு
தலைவனின் தத்துவங்கள்!

# அரசியலில், சாதீயமும்
உனக்குக் கருப்பொருளாயிருந்து;
அதை நீ,
சமத்துவம் காணும் கருவியாய்,
வைத்திருந்தாலும்;
உன்னைப் பலரும்,
தீண்டத் தகாதவனாக்கினர்!

# உன் அறிவையும்; திறணையும்;
ஏற்றுக் கொள்ளும் பக்குவமற்று,
உன்னைத் தூற்றுவதையே,
கருப்பொருளாக்கிவருள் சிலர்;
உன் அறிவார்ந்த செயலால்,
சமத்துவம் கண்டு, கல்வி கற்று,
பேனா பிடித்தவர்கள்!

#உன் துடுக்குத் தனமான பதில்களே
உன்னை பலரிடம் தூரப்படுத்தியது!
அது உன் தமிழை ஆழப்படுத்தியது!

# இனி,
கீழ்வானில் **"எழும் ஞாயிறு"**,
உதய சூரியனாய்,
உன் முகம் பார்த்து விட்டுத்தான்
மேலே எழும்!

**- கவிவளவன் (08-08-2018)**